

புரட்சிப்

# பெரியார் முழக்கம்

திராவிடர் விடுதலைக் கழக வார ஏடு

www.dvkperiyar.com

ஆசிரியர் : விடுதலை இராசேந்திரன் | திருவள்ளுவர் ஆண்டு 2053 | அக்டோபர் 06, 2022 | புரட்சி 21 | முழக்கம் 38 | விலை: ரூ.3.00


## அய்.நா.வில் இனஅழிப்புக்கு எதிரான தீர்மானம்

# இலங்கையை எதிர்த்து வாக்களிக்க வேண்டும்

*அய்.நா.வில் இலங்கை அரசு மீது பன்னாட்டு விசாரணை கோரும் தீர்மானத்துக்கு ஆதரவாக இலங்கையை எதிர்த்து இந்தியா வாக்களிக்க வேண்டும். தமிழ்நாடு அரசு இதை வலியுறுத்தி சட்டசபையில் தீர்மானம் நிறைவேற்ற வேண்டும் என்று ஈழத் தமிழர் பாதுகாப்பு கூட்டமைப்பு வலியுறுத்தியுள்ளது.*

ஐக்கிய நாடுகள் மனிதவுரிமைப் பேரவையின் 51ஆம் அமர்வு ஜெனிவாவில் கூடியுள்ளது. இது குறித்து மனிதவுரிமைகளுக்கான ஐ.நா. உயர் ஆணையர் கடந்த செப்டம்பர் 6ஆம் நாள் அறிக்கையளித்துள்ளார். சிறிலங்காவின் கடுமையான பொருளியல் நெருக்கடிக்கும் மனிதவுரிமை மீறல்களுக்குமான தொடர்பை உயர் ஆணையர் இவ்வறிக்கையில் சுட்டிக்காட்டியுள்ளார்.

பாதிப்புற்றவர்களுக்கு நீதி வழங்காமல் படைச் செலவை உயர்த்தி அடக்குமுறைக் கருவிகளை வலுவாக்கும் முயற்சிகளால்தான் நெருக்கடி இந்த அளவுக்கு முற்றியது என்று தமிழ்மக்கள் தரப்பில் எடுத்துக் காட்டி வரும் உண்மையை உயர் ஆணையர் அறிக்கை உறுதி செயதுள்ளது.

சிறிலங்காவின் குற்றங்களை சர்வதேசக் குற்றவியல் நீதிமன்றத்தின் பார்வைக்குக் கொண்டு செல்லவும் குற்றவாளிகள் மீது நடவடிக்கை எடுக்கவும் உயர் ஆணையர் உறுப்பு நாடுகளுக்குப் பரிந்துரை செய்துள்ளார்.

மேலும் சிறிலங்காவில் நடந்த பன்னாட்டுச் சட்ட மீறல் குற்றங்கள் தொடர்பான சான்றுகளைத் திரட்டிப் பாதுகாப்பதற்கான பொறிமுறை ஒன்றை உயர் ஆணையர் அலுவலகம் ஏற்படுத்த வேண்டும் என்று சென்ற 2021 மார்ச்சு திங்கள் நடைபெற்ற 46ஆம் அமர்வில் இயற்றப்பட்ட 46/1 தீர்மானம் கட்டளையிட்டது. ஆனால் இதற்குப் போதிய நிதி ஒதுக்கப்படாத நிலையில் இப்போதாவது உறுப்பு நாடுகள் நிதி வழங்குமாறும் உயராணையர் கேட்டுள்ளார்.

இந்தப் பின்னணியில் இந்த அமர்வில் சிறிலங்கா தொடர்பாக நிறைவேற்ற வேண்டிய தீர்மானம் 51/1க்கான வரைவை இங்கிலாந்து, அமெரிக்கா, கனடா, பிரிட்டன், ஜெர்மனி உள்ளிட்ட நாடுகளடங்கிய மையக் குழு (Core group) வெளியிட்டுள்ளது. இதன் மீதான விவாதமும் வாக்கெடுப்பும் வரும் அக்டோபர் 6ஆம் நாள் நடைபெறவுள்ளன. இப்போது ஜெனிவாவில் இதற்கான உரையாடல்களும் கருத்துப் பரிமாற்றங்ககளும் நடந்து வருகின்றன.

2009இல் முள்ளிவாய்க்காலில் இன அழிப்பை சிங்கள இராணுவம் நடத்தி முடித்தது. அதற்கு ஈடுசெய் நீதி பெறும் வகையில் (Remedial Justice) பின்வரும் கோரிக்கைகளைத் தமிழினம் தொடர்ந்து வலியுறுத்தி வருகிறது.

1) சிறிலங்காவை சர்வதேசக் குற்றவியல் நீதிமன்றத்தில் கூண்டிலேற்ற வேண்டும்

2) சிறிலங்காவின் இனவழிப்பு, போர்க்குற்றங்கள், மானிட விரோதக் குற்றங்கள் குறித்துத் தற்சார்பான பன்னாட்டுக் குற்றவியல் புலனாய்வு நடத்த வேண்டும்,

3) ஈழத் தமிழர்களின் சுயநிர்ணய உரிமைகளாக தாயகத்திலும் புலம்பெயர் உலகிலும் ஐ.நா. மேற்பார்வையில் ஈழத்தமிழர் பொது வாக்கெடுப்பு நடத்த வேண்டும்

ஐநா மனிதவுரிமைப் பேரவையில் முன்மொழியப் பட்டிருக்கும் தீர்மானம் மேற்கண்ட கோரிக்கை களை உள்ளடக்கியதாக இல்லை என்பது வருத்தத்திற் குரியது. தீர்மானம் முகப்புரைப் பகுதியில் சிறிலங்கா அரசைக் கடுமையாகக் குறை கூறியிருப்பினும் செயல் படுத்தும் பகுதியில் உருப்படியான எந்த நடவடிக்கைக் கும் வழி செய்வதாக இல்லை. இந்தத் தீர்மானத்தில் கண்டுள்ளவாறு 2025 செப்டம்பர் வரை சிக்கலை ஒத்தி வைப்பதற்கு எவ்வித நியாயமும் இல்லை.

முந்தைய தீர்மானங்களை மட்டுமல்ல, இந்தத் தீர்மானத்தையும் கூட ஏற்க முடியாது என்று மறுத்து அழிச்சாட்டியம் செய்யும் பேரினவாத சிறிலங்க அரசை வழிக்கு கொண்டுவர இந்தத் தீர்மானத்தில் எவ்வித முடிவும் இல்லை.

ஆனால் இந்தத் தீர்மானத்தையும் ஏற்கப் போவ தில்லை என்று சிறிலங்கா அறிவித்துள்ளது. சிறிலங் காவுக்கு ஆதரவான சீனம் போன்ற அரசுகளும் தீர்மானத்தை எதிர்த்து வாக்களிக்கப் போவதாக அறி வித்து விட்டன. இந்தியா என்ன செய்யப் போகிறது என்று இது வரை தெளிவாகத் தெரியவில்லை.

இந்தியா போர்க்குற்றங்களுக்கும் இன அழிப்புக்கும் நீதி கோருவதை விட்டு விட்டு ஒன்றுக்கும் உதவாத 13ஆம் திருத்தச் சட்டம் பற்றிப் பேசிக் கொண்டிருப்பதால் பயனில்லை. வரவிருக்கும் 51/1 தீர்மானத்தை எதிர்த்து இந்தியா வாக்களிக்கும் என்று சிறிலங்கா நம்பிக்கை தெரிவித்துள்ளது. இந்தியா அப்படிச் செய்தால் அது தமிழர்களுக்குச் செய்யும் மன்னிக்க முடியாத துரோகமாகி விடும் என்று எச்சரிக்க விரும்புகிறோம்.

51/1 தீர்மானத்தைத் தமிழ் மக்களின் கோரிக்கைக்கு இசைவாகத் திருத்தம் செய்து ஆதரிக்க வேண்டும் என்பது தமிழர்களின் எதிர்பார்ப்பு ஆகும். எக்காரணத்தை முன்னிட்டும் இந்தத் தீர்மானத்தை எதிர்த்து வாக்களிக்கவோ வாக்கெடுப்பில் கலந்து கொள்ளாமல் ஒதுங்கவோ கூடாது எனக் கோருகிறோம்.

தமிழர்களுக்கு எதிரானக் குற்றங்கள் தொடர்பில் சான்றுகள் திரட்டிவரும் மாந்த உரிமைகளுக்கான உயராணையர் அலுவலகத்தின் (OCHRC) பணிக்கு இந்திய அரசு நிதியுதவி செய்ய வேண்டும்.

51/1 தீர்மானம் தொடர்பான இந்தக் கோரிக்கையைத் தமிழக அரசும் இந்திய அரசிடம் வலியுறுத்தக் கேட்டுக் கொள்கிறோம். தீர்மானத்தை இந்தியா ஆதரிக்க வேண்டும் என்று தமிழக முதலமைச்சர் கோர வேண்டும்.

மேலும் தமிழ்நாடு அரசின் சார்பில் முதலமைச்சர் ஐ.நா. மனித உரிமைப் பேரவை உறுப்பு நாடுகள் அனைத்துக்கும் மடல் எழுதி மேற்சொன்ன தமிழர்களின் நீதிக் கோரிக்கைகளுக்கு ஆதரவு திரட்டும் படி வலியுறுத்திக் கேட்டுக் கொள்கிறோம்.

தமிழ்நாடு சட்டப்பேரவை கடந்த காலத்தில் ஒருமனதாக இயற்றிய தீர்மானங்களை அடியொற்றி, ஐநா மனிதவுரிமைப் பேரவையில் இந்தியா தமிழர்களின் நீதிக்கான கோரிக்கைகளை ஆதரிக்க வேண்டும், சிங்கள அரசுக்கு ஆதரவாக நிலை எடுக்கக் கூடாது என்று தமிழ்நாடு சட்டப் பேரவையில் புதிய தீர்மானம் இயற்ற வலியுறுத்துகிறோம்.

ஐ.நா. பாதுகாப்புப் பேரவையின் 77ஆவது அமர்வில் போர்க் குற்றங்களுக்கு பொறுப்புக்கூறல் பற்றிப் பேசிய இந்திய அயலுறவுத்துறை அமைச்சர் ஜெய்சங்கர் எந்நிலையிலும் போர்க்குற்றங்களுக்குத் தன்டனையில்லாத நிலை (impunity) கூடாது என்று பேசியிருப்பதை சிறிலங்காவுக்கும் பொருத்திப் பார்க்கும் படி கேட்டுக் கொள்கிறோம்.

இன்று 29.9.2022 வியாழன் காலை 11 மணி அளவில் பத்திரிகையாளர் மன்றத்தில் நடந்த ஊடக சந்திப்பில் தமிழ்த் தேசிய விடுதலை இயக்கத்தின் பொதுச் செயலாளர் தியாகு, திராவிடர் விடுதலைக் கழகத்தின் பொதுச் செயலாளர் விடுதலை இராஜேந்திரன், மனிதநேய மக்கள் கட்சியின் தலைமை நிர்வாகக் குழு உறுப்பினர் குணங்குடி அனீபா, எஸ்.டி.பி.ஐ. கட்சி யின் மாநிலச் செயலாளர் ஏ.கே. கரீம், மறுமலர்ச்சி திராவிட முன்னேற்றக் கழகத்தின் அமைப்புச் செய லாளர் வந்தியத்தேவன், தமிழக வாழ்வுரிமைக் கட்சி யின் தலைமை நிலையப் பேச்சாளர் திருவொற்றியூர் மாரிமுத்து, தந்தை பெரியார் திராவிடர் கழகத்தின் சென்னை மாவட்டச் செயலாளர் குமரன், தமிழ்த் தேச மக்கள் முன்னணியைச் சேர்ந்த ராஜா, இளந்தமிழகம் இயக்கத்தின் ஒருங்கிணைப்பாளர் செந்தில் உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

# திருவாங்கூர் சமஸ்தானத்தில் தூக்குத் தண்டனை ஏன் ஒழிக்கப்பட்டது?

அக்டோபர் - 2, காந்தியார் பிறந்தநாள். காந்தியார் ஜாதகப்படி அவர் 100 வயதையும் கடந்து வாழ்வார் என்று பிரபலமான ஜோதிடர்கள் கணித்தார்கள். ஆனால் அவர் 100 வயது கடப்பதற்கு முன்பே கோட்சே, நாராயண ஆப்தே இருவரும் காந்தியை மதவெறிக்காக சுட்டுக் கொன்றுவிட்டனர். இதற்காக இரண்டு பேருக்கும் நீதிமன்றம் தூக்கு தண்டனை விதித்தது. இருவரும் சித்பவன் பார்ப்பனர்கள்.

நீதிமன்றத்தில் கோட்சே ஒரு வாக்குமூலத்தை தந்தார். தான் காந்தியை கொன்றதை அவர் நியாயப்படுத்தினார். அதற்கு கீதையை அவர் தனக்கு துணையாக அழைத்துக்கொண்டார். “கீதையில் கிருஷ்ணபரமாத்மா அதர்மத்தை அழிப்பதற்காக கொலை செய்வது பாவமல்ல என்று கூறியிருக்கிறார். அழிவது உடல் தானே தவிர ஆன்மா அல்ல என்றும் அவர் கூறியிருக்கிறார். அந்த தத்துவத்தின் அடிப்படையில் தான் காந்தியை கொலை செய்தேன்” என்றார். நீதிமன்றம் இதை ஏற்கவில்லை. இருவருக்கும் தூக்கு தண்டனையை விதித்தது.

பிரிட்டிஷ் ஆட்சி காலத்தில் மெக்காலே என்ற அதிகாரி எந்த குற்றத்தை செய்த எந்த வர்ணத்தை சேர்ந்தவர் ஆனாலும் அவர்களுக்கு தண்டனை ஒரே மாதிரியாகத் தான் வழங்க வேண்டும் என்று கிரிமினல் சட்டத்தை அனைவருக்கும் பொதுவாக்கினார். அதற்கு முன்பு “இந்தியாவில் எந்த வர்ணத்தார் எந்த குற்றத்தை செய்தார் என்ற அடிப்படையில் தான் தண்டனைகள் மனு தர்மப்படி வழங்கப்பட்டு வந்தன.” அதற்கு முற்றுப்புள்ளி வைத்தது மெக்காலே தான். மெக்காலே சட்டம் வராமல் இருந்திருக்கும் என்று சொன்னால் கோட்சேவும், ஆப்தேவும் நிச்சயமாக தூக்கிலிடப்பட்டிருக்க மாட்டார்கள். அவர்களுக்கு மனுசாஸ்திரப்படி இரண்டு தலை முடிகள் மட்டுமே வெட்டப்பட்டு விடுவிக்கப்பட்டு இருப்பார்கள்.

திருவாங்கூர் சமஸ்தானத்தில் திவானாக இருந்த சர். சி.பி. ராமசாமி அய்யர் மெக்காலே கொண்டுவந்த இந்த கிரிமினல் சட்டத்தை அமல்படுத்துவதற்கு மறுத்தார். தொடர்ச்சியாக பிரிட்டிஷ் அரசு அந்த சமஸ்தானத்திற்கு அழுத்தங்களைத் தந்தது. அதற்குப் பிறகு தான் எங்களுடைய சமஸ்தானத்தில் தூக்கு தண்டனையை ஒழித்துவிடுகிறேன் என்று சர்.சி.பி.ராமசாமி அய்யர் அறிவித்தார். அதற்கு காரணம் அனைவருக்கும் பொதுவான கிரிமினல் சட்டத்தை அமல்படுத்தினால் பிராமணர்களுக்கும் தூக்கு தண்டனை விதிக்க வேண்டி வருமே என்பதற்காக தூக்கு தண்டனையையே ஒழிப்பதாக அறிவித்தார். இது தான் அந்த சமஸ்தானத்தில் தூக்கு தண்டனை ஒழிந்ததற்கான வரலாற்றுப் பின்னணி.

இந்த நிலையில் தான் காந்தியுடைய பிறந்தநாளை ஆர்.எஸ்.எஸ்.காரர்கள் தேர்ந்தெடுத்து ஊர்வலம் நடத்துவதற்கு தமிழ்நாட்டில் திட்டமிட்டார்கள். மக்கள் சக்தியும், மதச்சார்பற்ற சக்தியும் தன்னுடைய எதிர்ப்பின் காரணமாக முறியடித்துக் காட்டியிருக்கிறது.

தலையங்கம்

## கருக் கலைப்பு: உச்சநீமின்றத்தின் புரட்சிகர தீர்ப்பு

கருக் கலைப்பை திருமணத்திலிருந்து துண்டித்து அது பெண்ணின் தனித்துவ உரிமை என்ற புரட்சிகரமான தீர்ப்பை உச்சநீதிமன்றத்தின் நீதிபதி சந்திரசூட் தலைமையிலான அமர்வு வழங்கியிருக்கிறது. திருமணமான பெண் மட்டுமே கருவை சுமக்க வேண்டும்; இல்லையேல் அவர் 'கற்பு' என்ற புனிதத்தை இழந்து விடுவார்; சமூகத்தின் பார்வையில் ஒழுக்கமற்றவர்களாக புறக்கணிக்கப்படுவார்கள் என்ற பார்ப்பனிய மனு சாஸ்திர பழமைவாதங்களுக்கு மரண அடி தரும் தீர்ப்பு இது.

டெல்லியைச் சார்ந்த 25 வயது அய்ஸ்வர்யா, திருமணமின்றி தனக்கு மனமொத்தவரிடம் கொண்ட தொடர்பால் உருவான கருவை 23 வாரங்கள் கழித்து கலைக்க விரும்பினார். டெல்லி உயர்நீதிமன்றம் திருமணமாகாதவருக்கு கருக்கலைப்பு உரிமை இல்லை என்று சட்டத்தைக் காட்டி கோரிக்கையை நிராகரித்தது. உச்சநீதி மன்றம் போனார். கருக்கலைப்பு விதிமுறையில் பெண்ணின் உரிமையைப் பறிக்கும் இந்தத் தடையை அகற்ற வேண்டும் என்பதே அவரது கோரிக்கை. நியாயத்தை நீதிமன்றம் ஏற்றுக் கொண்டது. "விருப்பமில்லாத கருவைச் சட்டத்தின் பேரால் சுமக்கச் சொல்லி வலியுறுத்துவது அந்தப் பெண்ணின் கண்ணியத்தைக் குலைக்கும் செயல்" என்று கூறிய நீதிமன்றம், "மனைவி மீது கணவன், அவர் சம்மதமின்றி நிகழ்த்தும் பாலியல் உறவு, பாலியல் வல்லுறவுதான். அதன் விளைவாக உருவாகிற கருவைக் கலைக்க அனுமதிக்க வேண்டும். இதில் பெண்ணின் ஒப்புதல் மட்டுமே போதுமானது. தன் மீது நிகழ்ந்தது பாலியல் வல்லுறவுதான் என்று நிரூபிக்கத் தேவையில்லை" என்று உச்சநீதிமன்றம் தனது தீர்ப்பில் திட்டவட்டமாகத் தெரிவித்துள்ளது.

குடும்பக் கட்டுப்பாடுத் திட்டத்தை அரசு அறிமுகப்படுத்தியபோது பெரியார் அதை பெண் விடுதலைப் பார்வையில் தான் அணுகினார். அளவான குழந்தைகளைக் கொண்ட குடும்பம் தான் பொருளியல் வாழ்க்கைக்கு உதவும் என்று அரசும் பல குடும்பக் கட்டுப்பாடு நிபுணர் களும் முன் வைத்த கருத்திலிருந்து பெரியார் மாறுபட்டார். குழந்தை பெறும் தொல்லையி லிருந்து பெண்கள் விடுதலை பெற வேண்டும்; அதுவே பெண்ணடிமைக்கு முக்கிய பங்காற்று கிறது என்றார்.

பெரியார் இவ்வாறு கூறுகிறார்: "இன்னமும் பெண்களுக்கு, தாங்கள் ஆண்களைப்போல தங்கள் முழு விடுதலைக்கு உரியவர்கள் என்கின்ற எண்ணமே தோன்றவில்லை. தங்களுடைய இயற்கை அமைப்பின் தன்மையே தங்களை ஆண் மக்களுக்கு அடிமையாகக் கடவுள் படைத் திருப்பதன் அறிகுறியாய்க் கருதிக் கொண்டிருக் கிறார்கள். எப்படி எனில், பெண் இல்லாமல் ஆண் வாழ்ந்தாலும் வாழலாம். ஆனால், ஆண் இல்லாமல் பெண் வாழ முடியாது என்று ஒவ்வொரு பெண்ணும் கருதிக் கொண்டிருக்கிறார். அப்படி அவர்கள் கருதுவதற்கான காரணம், பெண்களுக்கு பிள்ளைகள் பெறும் தொல்லை ஒன்று இருப்பதால்" என்று கூறுகிறார். பெரியாரின் இந்தக் கருத்தைத் தான் இப்போது உச்சநீதிமன்றம் வழி மொழிந்திருக்கிறது.

பொதுவெளியில் இந்த சிந்தனைகளைப் பேசினால் உடனே 'இந்து மதத்தைத்' புண்படுத்து கிறார்கள் என்று வீதிக்கு வந்து கலவரம் செய்யக் காத்திருக்கிறது ஒரு பழைமைவாதக் கூட்டம். இதற்கான கருத்தியலுக்கு மதம் - பண்பாடு என்ற அடையாளத்தைப் போர்த்தி விடுகிறது பார்ப்பனியம். இன்னமும் 'சுயம் சேவக்குகளாக' ஆர்.எஸ்.எஸ். அமைப்பில் பெண்கள் சேர்க்கப்படாமல் தனிமைப்படுத்தப்படுகிறார்கள். ஆர்.எஸ்.எஸ். அணி வகுப்புகள் நூறு சதவீதம் ஆண்களை மட்டுமே கொண்டதுதான்.

ஆண்களோடு பெண்கள் சமமாக முடியாது என்பதே இந்துக் கலாச்சாரம் என்று கூறுகிறவர் களுக்கு ஆண்களோடு சேர்ந்து திருமண வாழ்க்கையில் பயணிப்பவர்கள் மட்டுமே கருக்கலைப்பு செய்ய முடியும் என்ற சட்டம் பெண்களின் கண்ணியத்துக்கு எதிரானது என்று சரியான பதிலடி தந்திருக்கிறது உச்சநீதிமன்றம். உச்சநீதிமன்றம் இந்துக்களை அவமதிக்கிறது என்று கூப்பாடு போடுவோர் வாய்மூடிக் கிடக்கிறார்கள்.

அதே நேரத்தில் 144 ஆண்டுகளுக்குப் பிறகு பெரியார் பெண்ணிய சிந்தனை வெற்றி பெருமிதத்தோடு தலைநிமிர்ந்து நிற்கிறது.

# இந்துத்துவா மாடல் – இப்படி

திராவிட மாடல் ஆட்சி என்றாலே, அதை குறை கூறுகிறார்கள், பாஜகவினரும், இந்துத்துவத்தினரும், பார்ப்பனர்களும். ஆனால் இந்துத்துவ மாடல் ஆட்சி எப்படி நடந்து கொண்டு இருக்கிறது என்பதற்கு ஏடுகளில் வந்திருக்கிற ஒரு செய்தியை சுட்டிக்காட்ட விரும்புகிறோம்.

உத்திரகாண்ட் மாநிலத்திலும், ஜார்க்கண்ட் மாநிலத்திலும் அரசு ஒரு திட்டத்தை அறிவித்து இருக்கிறது. உத்திரகாண்ட் மாநிலத்தில் அங்கு உள்ள ஒரு சிறையில் ஒரு நாள் ஒரு இரவு பொழுது தங்கிவிட்டு திரும்பினால் தோஷம் கழிந்துவிடும் என்ற ஒரு நம்பிக்கை இருக்கிறது. இந்த நம்பிக்கை உள்ளவர்களுக்கு சிறையில் அடைப்பதற்காக அரசே ஏற்பாடுகளை செய்து இருக்கிறது. ஒரு இரவுக்கு 500 ரூபாய் அரசுக்கு கட்டணம் செலுத்த வேண்டும். ஏற்கனவே ஜார்க்கண்ட் மாநிலத்தில் ஒரு இரவுக்கு 500 ரூபாய் செலுத்தி சிறையில் இருந்துவிட்டு வரலாம் என திட்டம் இருக்கிறது. இப்போது உத்திரகாண்ட் அரசும் அதே திட்டத்தை பின்பற்றப் போவதாக அறிவித்து இருக்கிறது.

ஜாதகப்படி தங்கள் மீதுள்ள தோஷம் இப்படி ஒரு நாள் இரவு சிறையில் தங்கிவிட்டு வந்தால் கழிந்து விடும் என்று மக்கள் நம்புகிறார்களாம். அதற்காக அரசே இப்படி ஒரு திட்டத்தை உருவாக்கி இருக்கிறது. 'ஹாத்துவானி' பகுதியில் உள்ள ஒரு சிறையில் சிறைத்துறை அதிகாரியாக இருக்கும் 'சதீஷ் சுடிஜா' என்பவர் கூறும் போது, தோஷம் என்று கூறி வருபவர்களுக்கு 500ரூபாய் கட்டணம் வாங்கிக்கொண்டு அவர்களுக்கு கைதிகளின் உடைகளை வழங்குகிறோம். சிறையில் உள்ள உணவுகளை வழங்குகிறோம். ஒரு நாள் முழுதும் இரவு சிறையில் தங்க வைக்கின்றோம். பிறகு அடுத்த நாள் காலை விடுதலை செய்கின்றோம் என்று தங்களுடைய அரசு திட்டத்தை பெருமையோடு அறிவித்து இருக்கிறார்.

நாளைக்கு சுடுகாட்டில் போய் பிணமாக படுத்திருந்தால் சாவு தோஷத்தில் இருந்து விலக்கு தங்களுக்கு கிடைக்கும் என்று நம்பினால் அதற்கும் இந்துத்துவா ஆட்சி ஏற்பாடு செய்தாலும் ஆச்சர்யப்படுவதற்கு இல்லை. இது தான் இந்துதுவ மாடல் ஆட்சி.

# 'சனாதன சன்ஸ்தா' ஏன் தடை செய்யப்படவில்லை?

பாப்புலர் ஃப்ரண்ட் ஆஃப் இந்தியா என்ற இஸ்லாமிய அமைப்பு அதன் துணை அமைப்புகளும் ஐந்தாண்டுகளுக்குத் தடை செய்யப்பட்டு இருக்கிறது. ஒன்றிய இந்துத்துவ ஆட்சி இந்த அறிவிப்பை இப்போது வெளியிட்டு இருக்கிறது. இது வன்மையான கண்டனத்திற்கு உரியதாகும்.

இஸ்லாமியர்கள் என்றால் அவர் இந்தியாவினுடைய விரோதிகள். பாகிஸ்தான் ஆதரவாளர்கள் என்ற ஒரு பிம்பத்தை இவர்கள் கட்டமைத்துக் கொண்டு இருக்கிறார்கள். எத்தனையோ இந்து தீவிரவாத அமைப்புகள் இந்த நாட்டில் வன்முறையை கையில் எடுத்துக்கொண்டு கோரத் தாண்டவம் ஆடிக்கொண்டு இருக்கின்றன. அவைகளெல்லாம் சுதந்திரமாக செயல்படுவதற்கு இந்துதுவ மோடி ஆட்சி அனுமதித்துக் கொண்டு இருக்கிறது.

"சனாதன் சன்ஸ்தா" என்ற ஒரு இந்துத்துவ அமைப்பு கோவாவை தலைமை இடமாகக் கொண்டு செயல்படுகிறது. இந்த அமைப்பினர் தபோல்கரை 2013ஆம் ஆண்டிலும், பன்சாரேவை 2015ஆம் ஆண்டிலும், கல்புர்க்கியை 2015ஆம் ஆண்டிலும், கௌரி லங்கேஷை 2016ஆம் ஆண்டிலும் பட்டப் பகலில் சுட்டுக் கொலை செய்தனர். கொலை செய்தவர்கள் சனாதன சன்ஸ்தா என்ற அமைப்பைச் சேர்ந்தவர்கள் என்று நிரூபிக்கப்பட்டு கைது செய்யப்பட்டு அவர்கள் மீதான விசாரணை வேண்டுமென்றே 2013லிருந்து காலம் தாழ்த்தப்பட்டுக் கொண்டு இருக்கிறது.

ஒரு பயங்கரவாத அமைப்பு குறிப்பிட்ட பெயர் கொண்ட அமைப்பு இத்தனை படுகொலை செய்தது என்பது சிபிஅய். விசாரணையில் கண்டுபிடிக்கப்பட்டதற்குப் பிறகும் கூட அந்த அமைப்பை இன்னும் அவர்கள் தடை செய்யவில்லை. இந்தியாவை இந்து இராஷ்ட்ரமாக மாற்றுவதற்கு இஸ்லாமியர்களை விரோதிகளாக கட்டமைக்க வேண்டும் என்ற நோக்கத்தோடு இஸ்லாமிய சமூகம் இன்றைக்கு தனிமைப்படுத்தப்பட்டு வருகின்றது. வடநாட்டில் இஸ்லாமியர்கள் வாழ்வதற்கு உரிய உரிமைகள் கூட இல்லாமல் அச்சத்தோடு வாழ்கின்ற ஒரு நிலையை உருவாக்கி விட்டார்கள்.

குஜராத்திலே மிகப் பெரிய இனப் படுகொலையை இஸ்லாமியர்களுக்கு எதிராக நடத்தினார்கள். தண்டிக்கப்பட்டவர்கள் இப்போது விடுவிக்கப்பட்டு வருகின்றார்கள். உ.பி.யிலே மிகப்பெரிய இஸ்லாமியர்களுக்கு எதிரான கலவரத்தை நடத்தினார்கள். குற்றவாளிகள் தண்டிக்கப்படவில்லை. மத மாற்ற தடைச் சட்டம், குடியுரிமை திருத்தச் சட்டம், காஷ்மீர் மாநிலத்திற்கான தனி உரிமை பறிப்பு, முத்தலாக் எதிர்ப்பு என்று படிப்படியாக இஸ்லாமிய மக்களை தனிமைப்படுத்தி வருகிறார்கள்.

## கழக ஏட்டுக்கு நன்கொடை

மலேசியத் திராவிடர் கழகம் சிலாங்கூர் மாநிலத் தலைவர் பரமசிவம், 'புரட்சிப் பெரியார் முழக்க' வளர்ச்சி நிதியாக ரூ.10,000/- வழங்கினார்.

வங்கதேசத்தில் பணிபுரிந்த தஞ்சை பகுதியை சேர்ந்த பெரியாரிய உணர்வாளர் இரமேஷ் ரூ. 5,000/- வழங்கியுள்ளார்.


விஜயகுமாரன், சென்னை - ரூ. 1,000/-; சபிதா ராஜன், புது டெல்லி - ரூ. 1,000/-

இராஜாராமன், கும்பகோணம் - ரூ. 1,000/-

(இணையதள பொறுப்பாளர் விசயகுமார் தொடர்பில் கிடைக்கப் பெற்றது. நன்றியுடன் பெற்றுக் கொண்டோம். - ஆர்)

மயிலாடுதுறை திராவிடர் விடுதலைக் கழகத் தோழர் சு. ஜவகர் தன்னுடைய பிறந்தநாளில், 'புரட்சி பெரியார் முழக்கம்' இதழுக்காக ரூ. 2000/- வளர்ச்சி நிதியாக அளித்தார்.

## காதல் உண்மையல்ல



உலகத்தில் காதலென்பதாக ஒரு வார்த்தையைச் சொல்லி, அதனுள் ஏதோ பிரமாதமான தன்மையொன்று தனிமையாக இருப்பதாகக் கற்பித்து மக்களுக்குள் புகுத்தி அனாவசியமாய் ஆண் - பெண் கூட்டு வாழ்க்கையின் பயனை மங்கச் செய்து காதலுக்காக என்று இன்ப மில்லாமல், திருப்தியில்லாமல் தொல்லைப்படுத்தப்பட்டு வரப்படு கிறதை ஒழிக்க வேண்டும் என்பதற்காகவே ஆகும்.

ஆனால், காதலென்றாலென்ன ? அதற்குள்ள சக்தி என்ன ? அது எப்படி உண்டாகிறது ? அது எதுவரையில் இருக்கின்றது ? அது எந்தெந்த சமயத்தில் உண்டாவது ? அது எவ்வப்போது மறைகின்றது ? அப்படி மறைந்து போய் விடுவதற்குக் காரணமென்ன ? என்பதைப் போன்ற விஷயங்களைக் கவனித்து ஆழ்ந்து யோசித்துப் பார்த்தால் காதலென்பது சத்தற்ற தன்மையும், உண்மையற்ற தன்மையும், நிச்சயமற்ற தன்மையும் அதை (காதலை)ப் பிரமாதப்படுத்துவதன் அசட்டுத்தனமும் ஆகியவைகள் எளிதில் விளங்கிவிடும். - குடி அரசு - 18.01.1931

# கோட்சே ஆர்.எஸ்.எஸ்.காரர் தான்!

***கோட்சே வாக்குமூலத்தில் ஆர்.எஸ்.எஸ். அமைப்பைக் காப்பாற்ற, தான் அந்த அமைப்பில் இல்லை என்று கூறியுள்ளான். உண்மையில் ஆர்.எஸ்.எஸ். தயாரிப்பு தான் கோட்சே என்பதற்கான ஆதாரங்களை கீழே தருகிறோம்.***

*காந்தியார் கொலைக்கும் ஆர்.எஸ்.எஸ்.சுக்கும் தொடர்பு உண்டு என்பதற்கு அடுக்கடுக்கான ஆதாரங்கள் உண்டு!*

*மொரார்ஜி தேசாய் தனது சுயசரிதையை,* ‘Story of my life’ *என்ற பெயரில் எழுதியிருக்கிறார். அதில் 248 ஆவது பக்கத்தில், காந்தியாரை சுட்டுக்கொன்றது நாதுராம் கோட்சே என்பவன் புனேயில், ‘ஆர்.எஸ்.எஸ். ஊழியனாக அவன் பணியாற்றியவன்’ என்று எழுதியிருக்கிறார். ஏ.ஜே.குர்ரான் எழுதிய* ‘Militant Hinduism in Indian politics’ *என்ற நூலில் ஆர்.எஸ்.எஸ். தலைவர் ஹெட்கேவருடன், சுற்றுப் பயணங்களில் உடன் சென்று கொண்டிருந்தவன் கோட்சே என்பதை எடுத்துக் காட்டியிருக்கிறார்.*

*நாதுராம் கோட்சேயின் சகோதரர் கோபால் கோட்சே காந்தியாரைக் கொலை செய்யப் புறப்பட்டபோது நடந்த நிகழ்ச்சிகளை, தனது வாக்குமூலத்தில் விவரிக்கிறார். காந்தியாரை சுட்டுக்கொல்ல சென்ற போது, கோட்சே பாடிய பிரார்த்தனைப் பாடலை அவர் குறிப்பிட்டிருக்கிறார். அது ஆர்.எஸ்.எஸ். ஷாகாக்களில் பாடப்படும் சமஸ்கிருதப் பிரார்த்தனைப் பாடல். கோட்சே ஒரு காலத்தில் ஆர்.எஸ்.எஸ்.சில் இருந்துவிட்டு பிறகு அதிலிருந்து விலகிப் போய் விட்டார் என்ற ஒரு வாதத்தை ஆர்.எஸ்.எஸ்.காரர்கள் முன் வைத்து தப்பித்துக்கொள்ளப் பார்க்கிறார்கள். அது உண்மைக்கு சம்பந்தமில்லாத வாதம் என்பதை கோபால் கோட்சேயின் இந்த ஒப்புதல் வாக்கு மூலமே காட்டிக் கொடுத்துவிடுகிறது.*

*கோட்சே பாடிய அந்த பிரார்த்தனைப் பாடல் - அவர் ஆர்.எஸ்.எஸ். உறுப்பினராக இருந்த அந்தக் காலத்தில் ஆர்.எஸ்.எஸ். ‘ஷாகா’ க்களில் பாடப்பட்ட பாடல் அல்ல; அப்போது மராத்திய மொழியில்தான் அவர்கள் பாடினார்கள். அதற்குப் பிறகு 1940 ஆம் ஆண்டில்தான் கோட்சே உச்சரித்த அந்த சமஸ்கிருதப் பிரார்த்தனைப் பாடல் நடைமுறைக்கு வந்தது. இந்தப் பாடல்ஆர்.எஸ்.எஸ்.காரர்களுக்கு மட்டுமே தெரியும், அவர்கள் ரகசியமாக அதை வைத்திருக்கிறார்கள்.*

*1932ஆம் ஆண்டிலேயே நாதுராம் கோட்சே - ஆர்.எஸ்.எஸ். சை விட்டுப் போய் விட்டார் என்றால் -1940ஆம் ஆண்டுக்குப் பிறகு அறிமுகப்படுத்தப்பட்ட ஆர்.எஸ்.எஸ்.காரர்களிடம் மட்டுமே ரகசியமாக வைக்கப் பட்டிருந்த - ஒரு சமஸ்கிருத பிரார்த்தனைப் பாடலை - காந்தியாரைக் கொலை செய்வதற்கு முன்பே கோட்சே எப்படிப் பாடினான்?*

*தங்களுக்கும் காந்தியார் கொலைக்கும் தொடர்பு இல்லை என்று காட்டுவதற்காக சில ஆதாரங்களைக் காட்டி அவர்கள் நூல் ஒன்றை வெளியிட்டார்கள். உள்துறை அமைச்சர் சர்தார் வல்லபாய் பட்டேல் - பிரதமர் நேருவுக்கு எழுதிய ஒரு கடிதத்தை (27 பிப் 1948ல் எழுதியது) அவர்கள் சான்றாக எடுத்துக் காட்டியிருந்தார்கள். அந்தக் கடிதத்தில் - காந்தியாரைக் கொலை செய்ய திட்டமிட்டது இந்து மகாசபை என்ற அமைப்புதானே தவிர ஆர்.எஸ்.எஸ். அல்ல என்று பட்டேல் எழுதியிருக்கிறார்.*

*துர்கா தாஸ் எழுதிய* ‘Sardarpatel’s Corespondence’ *நூலில் 6 ஆவது தொகுதியிலிருந்து மேற்கண்ட கடிதம் எடுத்துக் காட்டப்பட்டது. அதே நூலில் அதே 6 ஆவது தொகுதியில் பட்டேலின் மற்றொரு கடிதமும் இருக்கிறது. இந்தக் கடிதம் - முன்னாள் இந்து மகாசபைத் தலைவரும் - பின்னாள் ஜனசங்கத் தலைவருமான டாக்டர் முகர்ஜி என்ற பார்ப்பனருக்கு எழுதப்பட்ட கடிதம். இந்தக் கடிதத்திலே பட்டேல் என்ன குறிப்பிடுகிறார்?*

*நேருவுக்கு - பட்டேல் எழுதிய ஆர்.ஏஸ்.ஏஸ். காரர்கள் எடுத்துக்காட்டியிருக்கும் முதல் கடிதம், காந்தியார் கொலை வழக்கு விசாரணை தொடங்குவதற்கு முன்பு எழுதப்பட்டதாகும். கொலை வழக்கு விசாரணை துவங்கி ஒரு மாத காலத்துக்குப் பிறகு - டாக்டர் முகர்ஜிக்கு பட்டேல் இந்தக் கடிதத்தை எழுதுகிறார்; அதாவது வழக்கு பற்றிய புலன் விசாரணைகள் நடத்தப்பட்டு - பல உண்மைகள் அரசாங்கத்துக்கு தெரியவந்த பிறகு எழுதப்பட்ட கடிதம் இது.*

*ஆர்.எஸ்.எஸ்.க்கும். இந்து மகா சபைக்கும் காந்தியார் கொலைக்கும் தொடர்பு உண்டா என்பது பற்றி இப்போது நான் எதுவும் சொல்லக் கூடாது; வழக்கு நடக்கும் இந்த நேரத்தில் அப்படிச் சொல்வது நீதிமன்றத்தில் குறுக்கிட்டதாக ஆகிவிடும். ஆனால் அரசாங்கத்துக்கு வரும் தகவல்கள் ஒன்றை உறுதிப் படுத்திவிட்டது. இந்த இரண்டு அமைப்புகளின் நடவடிக்கைகளினால் தான் குறிப்பாக ஆர்.எஸ்.எஸ். நடவடிக்கையினால் தான், இப்படிப்பட்ட ஒரு துயரமான நிகழ்ச்சி நடப்பதற்கான சூழ்நிலை நாட்டில் உருவாகியது. இது பட்டேல் அவர்கள் - விசாரணை விவரங்கள் முழுதும் கிடைத்த பிறகு முகர்ஜிக்கு எழுதிய கடிதம் .*

- **மொரார்ஜி – கோட்சே ஆர்.எஸ்.எஸ்.காரர் என்பதை உறுதிப்படுத்தியதோடு, கோட்சே தம்பி கோபால் கோட்சே – தாங்கள் ஆர்.எஸ்.எஸ்.காரர்கள் என்பதை உறுதி செய்துள்ளார்.**
- **காந்தி ஆர்.எஸ்.எஸ். முகாமைப் பார்வையிட்டு பாராட்டினார் என்பது அப்பட்டமான பொய்.**
- **காந்தி நினைவிடத்தில் வழிகாட்டியை ஆர்.எஸ்.எஸ். ஆதரவாளர்கள் வேலையை விட்டு நீக்கியது ஏன்?**

*நேருவுக்கு எழுதிய கடிதத்தை எடுத்துக் காட்டி - குளிர்காய நினைக்கும் இந்தக் கூட்டம் - அதே தொகுதியில் டாக்டர் முகர்ஜிக்கு எழுதிய கடிதம் இருக்கிறதே, அதை எடுத்துக்காட்டாமல் போனது ஏன்? அதுவும் கொலை வழக்கு பற்றிய ரகசிய போலீஸ் விசாரணைகள் நடத்தி பல உண்மைகளைத் தெரிந்து கொண்ட பிறகு எழுதப்பட்ட கடிதம் அல்லவா?*

*காந்தியாரின் கொலை வழக்கு விசாரணை - 1948ஆம் ஆண்டு ஜுன் 22ஆம் தேதி டில்லி செங்கோட்டையிலே துவங்குகிறது, ஆத்மாச்சரன் என்ற விசேஷ நீதிபதி முன் விசாரணைகள் நடக்கின்றன. பிறகு இந்த வழக்கு அப்பீலுக்கு போகிறது; கிழக்கு பஞ்சாப் மாநிலத்தில் - சிம்லா உயர்நீதிமன்றத்தில் 1949 ஆம் ஆண்டு மே 2 ஆம் தேதி அப்பீல் விசாரணை துவங்கி, அதே ஆண்டு ஜுன் 21 ஆம் தேதி தீர்ப்பு வழங்கப் படுகிறது. குற்றவாளிகள் தண்டிக்கப்படுகின்றனர். பம்பாய் அட்வகேட் ஜெனரல் சி.கே.தப்தாரி* (C.K.Daphtary) *அரசாங்கத்தின் வழக்கறிஞர்.*

*இந்த வழக்கில் - அரசு வழக்கறிஞர் காந்தியார் கொலைக்கும் ஆர்.எஸ்.எஸ்.காரர்களுக்கும் தொடர்பு உண்டு என்று எந்த இடத்திலும் வாதாடவில்லை என்றும், நீதிபதியின் தீர்ப்பிலும் ஆர்.எஸ்.உஸ். மீது எந்தக் குற்றமும் சாட்டவில்லை என்றும் - ஆர்.எஸ்எஸ். காரர்கள் வாதாடுகிறார்கள். இந்த வாதத்திலேயும் சாரமும் இல்லை; சத்தும் இல்லை. எந்த ஒரு அரசாங்கமும், வழக்கு விசாரணையில் குற்றவாளிகள் தண்டிக்கப்பட வேண்டும் என்பதைத் தான் முக்கிய நோக்கமாகக் கொண்டிருப்பது வழக்கம். ஒருவனைக் குற்றவாளி என்று நிரூபிக்கும் முயற்சிகளில் ஈடுபடும்போது அதற்கு ஒரு அமைப்போ அல்லது ஒரு தத்துவமோதான் காரணமாக இருந்தது என்று குற்றம் சாட்டி வாதாடுவது இந்தியாவில், அந்தக் காலத்திலும் சரி; இந்தக் காலத்திலும் சரி; நீதிமன்ற நடைமுறையாக இருக்கவில்லை. காரணம் இந்த அடிப்படையில், குற்றத்தை நிரூபிப்பது மிகவும் கடினம்.*

*காந்தியாரைக் கொலை செய்த கோட்சே ஒரு ஆர்.எஸ்.எஸ்.காரர்தான் என்பதை சட்டப்படி நிரூபித்துவிட்டதாக வைத்துக்கொண்டாலும் - அந்த அடிப்படையினால் மட்டும் ஆர்.எஸ்.எஸ். அமைப்புச் சட்டப்படியான ஒரு குற்றவாளி அமைப்பாகிவிட முடியாது. அந்த அமைப்பின் முக்கிய பொறுப்பில் உள்ளவர்கள் ஒன்றாக சந்தித்து காந்தியாரை கொலை செய்யவேண்டும் என்று முடிவு எடுத்து அதற்குப் பிறகு கோட்சேயிடம் அந்தப் பொறுப்பை ஒப்படைத்தார்கள் என்பதை நிரூபித்தால் தான் ஆர்.எஸ்.எஸ். என்ற அமைப்பே “குற்றவாளி” ஆகமுடியும். இவைகளை “ரெக்கார்டு” பூர்வமாக நிரூபிப்பது இயலாத காரியம்! இந்த விவகாரங்களில் ஈடுபட்டு வழக்கு திசை திரும்பி குற்றவாளிகள் தப்பித்துக்கொள்ளும் சூழ்நிலை உருவாகி விடக்கூடாது அல்லவா? எனவேதான் குற்றவாளிகள் தண்டிக்கப்பட வேண்டும் என்ற ஒரே நோக்கத்தில் - அரசு வழக்கறிஞர் - இதில் ஆர்.எஸ்.எஸ். அமைப்பைக் கொண்டு வந்து சேர்க்கவில்லை. அது மட்டுமல்ல; ஆர்.எஸ்.எஸ். அமைப்புக்கு உறுப்பினர் புத்தகம் எதுவும் கிடையாது, உறுப்பினர் அட்டை கிடையாது. உறுப்பினர் கட்டணமும் கிடையாது; எனவே, ரசீது கொடுப்பது என்ற பிரச்சினையே எழவில்லை. எனவே - கோட்சே ஆர்.எஸ்.எஸ். உறுப்பினர் என்பதை நிரூபிப்பது “ரெக்கார்டுகளின்” மூலம் இயலாது; எனவே நீதிமன்றத்தில் அரசு வாதாடவில்லை என்ற காரணமோ தீர்ப்பில் ஆர்.எஸ்.எஸ். பற்றி எதுவும் குறிப்பிடவில்லை என்ற வாதமோ இவர்களைக் காப்பாற்றிவிட முடியாது.*

*காந்தியார் கொலை வழக்கு விசாரணை முடிந்த பிறகு மத்திய அரசு இந்தக் கொலை பற்றி விசாரிக்க ஒரு விசாரணைக் கமிஷனை அமைத்தது. ஓய்வு பெற்ற முன்னாள் சுப்ரீம் கோர்ட் நீதிபதி ஜே.எல்.கபூர் இந்த விசாரணைக் கமிஷனின் தலைவர். இந்தக் கமிஷன் பல்வேறு நகரங்களில் விசாரணையை நடத்தி, 1969 ஆம் ஆண்டு விசாரணை அறிக்கையை அரசிடம் தாக்கல் செய்தது. இதில் 101 சாட்சிகள் விசாரிக்கப்பட்டனர்; 407 ஆதாரப் பத்திரங்கள் (டாக்குமெண்ட்ஸ்) விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டன.*

*கபூர் கமிஷன் நியமிக்கப்பட்டபோது அதிலே தந்திரமான ஒரு சூழ்ச்சியை செய்துவிட்டார்கள்; அதாவது விசாரணைத் கமிஷனுக்கு நிர்ணயிக்கப் பட்ட வரம்புகளில்* (Terms of reference) *காந்தியார் கொலையில் ஆர்.எஸ்.எஸ். நேரடி பங்கு உண்டா என்பது பற்றி குறிப்பிடவில்லை . எனவே - இந்தப் பிரச்சினை விசாரணைக் கமிஷனின் வரம்புக்கே உட்படாத ஒரு பிரச்சினையாக ஆக்கப்பட்டு விட்டது. அப்படிப் பட்ட சூழ்நிலையில் கமிஷன் ஆர்.எஸ்.எஸ். காரர்கள் பற்றி தனது பரிந்துரையில் எப்படிக் குறிப்பிட முடியும்?*

*கபூர் ஆணையத்தில் சாட்சியளித்த சிலர் ஆர்.எஸ்.எஸ். தொடர்பு பற்றி பதிவு செய் துள்ளார்கள். அவற்றில் சில:*

*95ஆவது சாட்சி ஜே.என்.சஹானி* (Sahani). *அவரது சாட்சியத்தை கமிஷன் அறிக்கையில் 19 ஆவது அத்தியாயம் 56ஆவது பாராவில் கீழ்க் கண்டவாறு தொகுத்துத் தந்திருக்கிறது.*

*“ஜே.என்.சஹானி, ஒரு ரகசிய அமைப்புப்பற்றி சாட்சியம் அளித்தார். ஆனால் அது ஆர்.எஸ்.எஸ். என்று நேரடியாக அவர் குறிப்பிடவில்லை அந்த நாள்களில் பிர்லா மாளிகையில் (காந்தியார் இருந்த போது) குண்டு வெடித்த நிகழ்ச்சி பற்றி பகிரங்கமாக விவாதிக்கப்பட்டது. அந்த ரகசிய அமைப்பில் சுமார் 6 இலட்சம் தொண்டர்கள் இருந்தார்கள். அவர்கள் உள்நாட்டில் ஒரு ஆட்சிக் கவிழ்ப்புப் புரட்சியை நடத்தத் திட்டமிட்டிருந்தார்கள். அந்த அமைப்பின் தலைவர்களாக கோல்வாக்கர், போபாத்கார், டாக்டர் காரே என்பவர்கள் இருந்ததாகச் சொல்லப்படுகிறது. முக்கிய தலைவர்களைத் தீர்த்துக்கட்டிவிட்டு பிறகு அரசாங்கத்தைக் கவிழ்க்க அவர்கள் திட்டமிட்டிருந்தார்கள் என்றும் அதற்காக அந்த அமைப்பின் தொண்டர்களுக்கு ஆல்வார் பரத்பூர் மற்றும் வேறு சில இடங்களில் பயிற்சி தரப்பட்டதாகவும் சொல்லப்படுகிறது. மகாத்மா காந்தி கொல்லப் பட்டது அந்த திட்டத்தின் ஒரு பகுதியே ஆகும். இந்த அமைப்புக்கு பல மன்னர்களும் ஆதரவு தருகிறார்கள். பிரிட்டிஷார் போனவுடன் குறைந்தது தாங்கள் ஆட்சி செய்த ராஜ்யமாவது தங்களிடம் மீண்டும் கிடைக்கும் என்று இவர்கள் எதிர்பார்த்தார்கள். ஜெய்ஸ்லா மார். ஜோத்பூர் ஆல்வார், பரத்பூர், பரோடா, போபால் மன்னர்கள் தான் இந்த அமைப்புக்கு உதவி செய்தவர்கள். இந்த ரகசிய அமைப்புக்கு நாக்பூரிலிருந்து கோல்வாக்கரும் புனேயிலிருந்து போபாத்கார் என்ப வரும் தலைமை தாங்கி நடத்தினார்கள்.”*

*இப்படிப்பட்ட மன்னர்களின் ஆதரவோடு இந்தப் பார்ப்பனக் கூட்டம் நடத்திய கொலைவெறி சதித் திட்டத்தை ஜே.என். சஹானி தனது சாட்சியத்தில் எடுத்துச் சொல்லியிருக்கிறார். இதற்கு விசாரணைக் கமிஷன் - தனது கருத்தை அடுத்த பாராவில் கீழ்க்கண்டவாறு தெரிவித்திருக்கிறது :*

*“குருஜி கோல்வாக்கர் என்பவர் ஆர்.எஸ்.எஸ். என்ற அமைப்புக்குத் தலைவராக இருக்கிறார் என்பது மட்டுமே கமிஷனுக்குத் தெரிகிறது. சஹானி இந்த நடவடிக்கைகள் ஆர்.எஸ்.எஸ். நடவடிக்கைகள் என்று பெயரைக் குறிப்பிட்டுச் சொல்லாமல் , பொதுவாக ரகசிய அமைப்பு என்றே சொல்லி இருக்கிறார்.” (கமிஷன் அறிக்கை 19 ஆவது அத்தியாயம் - 57 ஆவது பாரா) என்று கமிஷன் தனது கருத்தை சொல்லியிருக்கிறது.*

*95ஆவது சாட்சியமான ஹீஜா என்பவர் தந்திருக்கிற சாட்சியங்கள் இன்னும் அதிர்ச்சியூட்டக் கூடியதாகும். அவர் கூறுவதைப் பாருங்கள் : 1947 மே - ஜூன் மாதத்தில் ஆல்வார் என்ற இடத்தில் ஒரு ஆர்.எஸ்.எஸ். முகாம் நடந்தது. அந்தப்பகுதி மன்னர் ஆட்சியில் பிரதமராக இருந்த டாக்டர் காரே, உள் துறை அமைச்சராக இருந்தவர். இருவருமே அந்த முகாமுக்கு தங்கள் முழு ஆதரவையும் அளித்தனர். மன்னருக்கும் இது நன்றாகத் தெரியும். மன்னரும் இந்த இரண்டு அமைச்சர்களும் ஆர்.எஸ்.எஸ்.*

*(4ஆம் பக்கம்)*

DATE OF PUBLICATION - EVERY THURSDAY TAMIL WEEKLY REG.NO.TN/CC(S)DN/459/22-24 LICENCED TO POST WPP NO.TN/PMG(CCR)/WPP-462/22-24
PURATCHI PERIYAR MUZHAKKAM REGISTERED WITH THE REGISTRAR OF NEWSPAPER FOR INDIA UNDER NO.TNTAM/2002/07776

# அரசு அலுவலகங்களில் மத வழிபாடு நடத்துவது அரசாணைக்கு எதிரானது

அரசு அலுவலகங்களில் மதம் சார்ந்த வழிபாடுகளை, சரஸ்வதி பூஜை, ஆயுத பூஜைகளை கொண்டாடக் கூடாது என தலைமைச் செயலாளர்கள், உயர் அதிகாரிகள் ஆணைகளை ஏற்கனவே பிறப்பித்துள்ளனர். ஆனால் அந்த ஆணைகளை அவமதிக்கும் வகையில் மத வழிபாடுகளை அரசு அலுவலகங்களில் தொடர்ந்து நடத்துகிறார்கள்.

எனவே தமிழ்நாடு அரசின் மதச்சார்பற்ற கொள்கைகளுக்கும், சமூக அமைதிக்கும் எதிரான ஆயுத பூஜை வழிபாடுகள் அரசு அலுவலகங்களில் நடந்திடாதவாறு பார்த்துக் கொள்ள வேண்டும் என்று வலியுறுத்தி 23.9.2022 அன்று காலை 11 மணி அளவில் திராவிடர் விடுதலைக் கழகம் சார்பில் கோவை மாவட்ட ஆட்சியர், கோவை மாநகர காவல் ஆணையர், கோவை மாவட்ட காவல் கண்காணிப்பாளரிடம் மனு அளிக்கப்பட்டது.

கலந்து கொண்ட தோழர்கள்: பன்னீர்செல்வம், நிர்மல் குமார், கிருஷ்ணன், மாதவன், இயல் , சிவராசு, ஸ்டாலின் ராஜா , சதீஷ் கலந்து கொண்டனர்.

(3ஆம் பக்கத் தொடர்ச்சி)

நடவடிக்கைகளுக்கு முழு ஆதரவை தந்தனர். பிப்ரவரி மாத ஆரம்பத்தில் ஆர்.எஸ்.எஸ்.காரர்களுக்கு ராணுவப் பயிற்சி அளிக்கப்பட்டது. ராஜாவின் ராணுவ வீரர்கள் தங்கியிருந்த பாசறையிலே இவர்களும் தங்கி ராணுவப்பயிற்சி பெற்றனர். சுழல் துப்பாக்கி கைத்துப்பாக்கி சுடும் பயிற்சிகளும் ஆர்.எஸ்.எஸ்.காரர்கள் பெற்றனர்.” (19ஆவது அத்தியாயம் - 60ஆவது பாரா)

பி.பி.எஸ். ஜெட்லே என்ற சீனியர் புலனாய்வுத்துறை அதிகாரி கமிஷன் முன் அளித்த சாட்சியத்தைப் பாருங்கள்; இவர் 55 ஆவது சாட்சி! இவரது சாட்சியத்தை கமிஷன் தனது அறிக்கையில் கீழ்க்கண்டவாறு தொகுத்துக் கூறியுள்ளது.

சுதந்திரத்துக்குப் பிறகு - இரண்டு மாதங்களில், ஆர்.எஸ்.எஸ்.காரர்கள் மீது 600லிருந்து 700 வழக்குகள் வரை இந்த அதிகாரி பதிவு செய்துள்ளார். ஆயுதங்கள் சேகரித்து, கிராமத்தினர் மீது தாக்குதல் நடத்தியது, தனி நபர்களைத் தாக்கியது போன்ற பல்வேறு குற்றங்களில் அவர்கள் ஈடுபட்டனர். எனவே இந்த அதிகாரி ஆர்.எஸ்.எஸ். தடை செய்யப்பட வேண்டும் என்று பரிந்துரைத்தார். உ.பி. பிரதமர் (Premier) ஜி.பி. பந்த் உள்துறை அமைச்சர் லால் பகதூர் சாஸ்திரி ஆகியோரை சந்தித்து, இந்தக் கருத்தை எடுத்துச் சொன்னார். அவர்கள் பட்டேலிடம் கலந்து ஆலோசிப்பதாகக் கூறினர். ஆனால் மகாத்மா காந்தி கொலை செய்யப்பட்ட பிறகுதான், ஆர்.எஸ்.எஸ். தடை செய்யப்பட்டது. (கமிஷன் அறிக்கை 19 ஆவது அத்தியாயம் 59 ஆவது பாரா)

டில்லி இரகசிய போலீஸ் துறையின் புலனாய்வு அறிக்கையையும் கமிஷன் தனது அறிக்கையில் சுட்டிக்காட்டியிருக்கிறது. 1947 ஆம் ஆண்டு டிசம்பர் 8 ஆம் தேதி ரகசிய போலீஸ்துறை அரசுக்கு அளித்த அறிக்கையில் குறிப்பிட்டிருப்பது, இதோ: “1947 ஆம் ஆண்டு டிசம்பர் 8 ஆம் தேதி டில்லி ராமலீலா மைதானத் தில் ஆர்.எஸ்.எஸ். ஊழியர்கள் கூட்டம் ஒன்று நடந்தது. அதில் 2500 பேர் கலந்து கொண்டனர். கோல்வாக்கர் பேசுகையில், மேலும் தொண்டர்களை அதிகமாக சேர்க்குமாறும். **சிவாஜி மன்னனைப்போல் கொரில்லா யுத்தத்திற்கும் தயாராகுமாறும் அழைப்பு விடுத்தார்.** ஆர்.எஸ்.எஸ். பாகிஸ்தானை ஒழித்துக் கட்டும்; அதில் யாராவது குறுக்கே வந்தால் அவர்களையும் ஆர்.எஸ்.எஸ். ஒழித்துக் கட்டும் என்றும் கோல்வாக்கர் பேசினார். “அது நேரு அரசாங்கமாக இருந்தாலும் சரி; வேறு எந்த அரசாங்கமாக இருந்தாலும் சரி, அது பிரச்சினை அல்ல; நாம் வாழ்வதற்கு இங்கே இடம் கிடையாது. நமது எதிரிகளை உடனடியாக மூச்சை அடக்கச் செய்யும் முறை நமக்குத் தெரியும்” என்று வன்முறையைத் தூண்டிவிடும் வகையில் கோல்வாக்கர் பேசினார். (கமிஷன் அறிக்கை 19 ஆவது அத்தியாயம் 78 ஆவது பாரா) இப்படி ஏராளமான சாட்சியங்களை எடுத்துக் காட்டிக்கொண்டே போகலாம்!

காந்தியார் கொலைக்கும் ஆர்.எஸ்.எஸ். சுக்கும் தொடர்பு இல்லை என்றால் கோட்சே செய்தது தவறான நடவடிக்கை என்று இதுவரைக் கண்டித்து இருக்கிறீர்களா? காந்தியாரைக் கொலை செய்வதற்கு கோட்சே சொன்ன காரணம் எங்களுக்கு உடன்பாடு இல்லை என்று இதுவரை கூறியிருக்கிறீர்களா? மற்ற தரப்பிலிருந்து எடுத்து வைக்கப்படும் கருத்துக்களை வைத்துக் கொண்டு நழுவப் பார்க்கும் வேலைகள் வேண்டாம்; மக்கள் மன்றத்தை நீண்டநாள் ஏமாற்றிவிட முடியாது.

மொரார்ஜி தேசாய் தனது சுயசரிதையில் - கோட்சே ஒரு ஆர்.எஸ்.எஸ். காரர்தான் என்று திட்டவட்டமாக சொல்லியிருப்பதை - டில்லி காந்தி சமாதியில் உள்ள ஒரு கைடு, பார்க்க வருபவர்களிடம் எடுத்துச் சொல்லிக் கொண்டிருப்பார். அவரது பெயர் பி.என். தாமோதரன் (நாயர்) காந்தியார் பற்றிய வரலாற்றைச் சொல்லும் போது இந்த விவரத்தையும் அவர் நீண்ட காலமாகவே சொல்லி வந்தார்.

மொரார்ஜி தேசாய் பிரதமரான பிறகு, 1977 ஆம் ஆண்டு அக்டோபர் 8ஆம் தேதி மொரார்ஜி அந்த சமாதிக்குச் செல்கிறார்; அப்போது உடன் சென்றவர் சிக்கந்தர் பக்த் என்ற வீட்டு வசதித்துறை அமைச்சர். அப்போது இந்தக் கைடு கோட்சே ஒரு ஆர்.எஸ்.எஸ்.காரர் என்று எல்லோரிடமும் விளக்குவது மொரார்ஜியின் கவனத்துக்குக் கொண்டுவரப்பட்டது. உடனே மொரார்ஜி சொன்னார்: “அது சரித்திர உண்மை ; அதை யாராலும் மாற்ற முடியாது; என்று அதற்கு சில நாள்களிலேயே அந்தக் கைடு வித்யார்த்தி பரிஷத் (இது ஒரு ஆர்.எஸ்.எஸ். மாணவர் அமைப்பு)காரர்களால் மூர்க்கத்தனமாகத் தாக்கப்பட்டார். வீட்டு வசதித் துறை அமைச்சர் நிர்வாகத்தின் கீழ்தான் காந்தி சமாதி இருந்தது; எனவே அந்த ஊழியர் வேலையை விட்டே நீக்கப்பட்டு விட்டார். பிறகு நாடாளுமன்றத்தில் இது மிகப் பெரிய பிரச்சினை யாகியது. (ஆதாரம்: டி ஆர் கோயல் எழுதிய ஆர்.ஏஸ்.ஏஸ். நூல் - பக்.133)

தவறு செய்தவர்களை, கொலை செய்ய கீதையில் கிருஷ்ணன் வலியுறுத்த வில்லையா என்று அப்போது காந்தியாரிடம் இவர்கள் கேட்கிறார்கள். தவறு செய்தவர்களைத் தண்டிக்கும் பொறுப்பு இப்போது அரசாங்கத்திற்குத்தான் உண்டு. அந்த அதிகாரத்தை நீங்கள் எடுத்துக் கொண்டுவிட்டால் நேருவும், பட்டேலும் அதிகாரமற்றவர்கள் ஆகிவிடுவார்கள் என்று காந்தியார் பதிலளித்தார்.

# மனுசாஸ்திரத்தைத் தடை செய்: சங்கராபுரத்தில் கழகம் ஆர்ப்பாட்டம்

பெரியார் பிறந்தநாளை ஒட்டி செப்டம்பர் 17 சனிக்கிழமை காலை 10 மணியளவில் கள்ளக்குறிச்சி சங்கராபுரம் மற்றும் புத்தூரில் உள்ள பெரியாரின் சிலைக்கு மா.குமார் மற்றும் தே.ச.அன்புரவி ஆகியோரின் தலைமையில் மாலை அணிவித்து மரியாதை செலுத்தப்பட்டது. அன்று மாலை 4 மணியளவில் ரிஷிவந்தியம் ஒன்றியம் வானாபுரம் - பகண்டை கூட்டுச் சாலையில் கழகத்தின் மாவட்ட துணை செயலாளர் மு.நாகராஜ் தலைமையில் ‘சனாதனத்தை வேரறுப்போம்’ தெருமுனைக் கூட்டம் நடைபெற்றது.

மாவட்ட அமைப்பாளர் சாமிதுரை, மாவட்ட செயலாளர் க.இராமர், மற்றும் தலைமைக்குழு உறுப்பினர் ந.அய்யனார் ஆகியோர் சிறப்புரையாற்றினர். ஊட்டத்திற்கு ரிஷிவந்திய ஒன்றிய அமைப்பாளர் இரா.கார்மேகம், ஒன்றிய தலைவர் மா. குமார், சங்கராபுரம் ஒன்றிய செயலாளர் தே.க. அன்புரவி ஆகியோர் முன்னிலை வகித்தனர். அறிவியல் மன்ற அமைப்பாளர் வீ.முருகன் நன்றி கூறினார். கூட்டத்தில், இரா.வீரமணி, இரா. ஜீவா, மு.ச.பா, கௌதம், ச.சுபாஷ், கு. பாபா, நீதிபதி உள்ளிட்ட தோழர்கள் உட்பட பலரும் கலந்து கொண்டனர்.

**ஆர்ப்பாட்டம் :** கள்ளக்குறிச்சி மாவட்டம், சங்கராபுரத்தில் மும்முனை சந்திப்பில் செப். 28 புதன்கிழமை மாலை 4 மணியளவில் கழகத்தின் சார்பில், “ஆ.இராசா பேசியதில் என்ன தவறு” என்றும், பெரும்பான்மை இந்துக்களையும் பெண்களையும், சூத்திரர்கள் என்று இழிவு படுத்தும் மனுதர்ம நூலை தடை செய் என்றும் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. ஆர்ப்பாட்டத்திற்கு சங்கராபுரம் ஒன்றிய செயலாளர் அன்புரவி தலைமை வகித்தார். ரிஷிவந்தியம் ஒன்றிய அமைப்பாளர் இரா.கார்மேகம் ஒன்றிய தலைவர் குமார், மாவட்ட துணை செயலாளர் மு.நாகராஜ் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

மாவட்ட செயலாளர் க.இராமர், மாவட்ட அமைப்பாளர் சி.சாமிதுரை, ச.கு.பெரியார் வெங்கட், மாவட்டத் தலைவர் க.மதியழகன், திருமால் ஆகியோர் உரையாற்றினர். நிறைவாக மனுதர்மத்தில் உள்ள இழிவுகள், ஆ.இராசா பேசியதில் என்ன தவறு உள்ளிட்ட கருத்துகளை தலைமைக்குழு உறுப்பினர் ந.அய்யனார் கருத்துரையாற்றினார். நிகழ்வில், அறவியல் மன்ற அமைப்பாளர் வீ.முருகன் நன்றி கூறினார்.

# குமரேசன்-பனிமலர் வாழ்க்கைத் துணை ஏற்பு

சங்கராபுரம் , கடுவனூர் கிராமத்தைச் சேர்ந்த முத்தன் - விஜியா இணையரின் மகன் குமரேசனுக்கும், திருவண்ணாமலை மாவட்டத்தைச் சேர்ந்த முனுசாமி - வாசுகி இணையரின் மகள் பனிமலர் என்பவருக்கும் வாழ்க்கை இணையேற்பு நிகழ்வு செப்டம்பர் 11 ஞாயிற்றுக்கிழமை மாலை 4 மணியளவில் கடுவனூர் பெரியார் திடலில், கழகத் தலைவர் கொளத்தூர் மணி தலைமையில் நடைபெற்றது.

மாவட்ட அமைப்பாளர் சாமிதுரை, மாவட்டத் தலைவர் க.மதியழகன் ஆகியோர் முன்னிலை வகித்தனர். நிகழ்விற்கு குமார் - அம்சவள்ளி வரவேற்புரை கூறினர். சடங்கு, சம்பிரதாயங்கள், பார்ப்பன அர்ச்சகரைத் தவிர்த்த இந்த வாழ்க்கை இணை ஏற்பிற்கு உறவினர்கள், பொதுமக்கள் ஏராளமானோர் பங்கேற்றனர். புதுவை ‘விடுதலைக் குரல்’ குழுவின் பாடல் நிகழ்ச்சி நடைபெற்றது.

நிகழ்வில், தமிழ்நாடு அறிவியல் மன்றத் தலைவர் ஆசிரியர் சிவகாமி, தலைமைக்குழு உறுப்பினர் ந.அய்யனார் ஆகியோர் வாழ்த்துரை வழங்கினர். இணையர் ‘புரட்சிப் பெரியார் முழக்க’ வளர்ச்சி நிதியாக ரூ.1000/- வழங்கினர். நிறைவாக மணமக்கள் நன்றி கூறினர்.

# ஜாதி மறுப்பு சுயமரியாதைத் திருமணம்

22.09.2022 அன்று காவலாண்டியூர் தந்தை பெரியார் படிப்பகத்தில் திருப்பூர் வாஷிங்டன் நகரில் வசிக்கும் முனீஸ்வரன்- மேகலா ஆகியோரின் மகன் சீனு பாலாஜி. தேனி மாவட்டம் போடிநாயக்கனூர் திருப்பதிவாசன் - ஜோதிமணி ஆகியோரின் மகள் வீர ஜெயப்பிரியா ஆகியோருக்கு கழக தலைமைக்குழு உறுப்பினர் க.ஈசுவரன் தலைமையில் சேலம் கிழக்கு மாவட்ட கழக அமைப்பாளர் ஏற்காடு பெருமாள் முன்னிலையில் ஜாதி மறுப்பு சுயமரியாதைத் திருமணம் நடைபெற்றது. இத்திருமண மகிழ்வாக இணையர்கள் சீனு பாலாஜி - வீர ஜெயப்பிரியா ஆகியோர் கழக வளர்ச்சி நிதியாக ரூ.10,000 வழங்கினர்.

## திருச்செங்கோட்டில் பெரியார் பிறந்த நாள் விழா

பெரியார் பிறந்தநாளை ஒட்டி, 17.09.2022 அன்று காலை 9 மணியளவில், திருச்செங்கோடு புதிய பேருந்து நிலையத்திற்கு அருகில் உள்ள பெரியார் சிலைக்கு கழகத் தோழர்கள் மாலை அணிவித்தனர். பின்னர் 10 மணியளவில், திருச்செங்கோடு நகர செயலாளர் பூபதி தலைமையில், அண்ணாசிலை அருகில் திராவிடர் விடுதலைக் கழகம் சார்பில் வைக்கப்பட்ட பெரியார் படத்திற்கு, திராவிட முன்னேற்ற கழகம், ஆதித்தமிழர் பேரவை, விடுதலை சிறுத்தைகள் மற்றும் தோழமை இயக்கங்கள் சார்பில் மலர் தூவி மரியாதை செலுத்தப்பட்டது. பின்னர் சமூகநீதி நாள் உறுதிமொழி ஏற்கப்பட்டது. திமுக சார்பில் திருச்செங்கோடு நகர் மன்றத் தலைவர் நளினி, துணைத் தலைவர் கார்த்தி, ஒன்றிய கவுன்சிலர் திருநங்கை ரியா, ஆதித்தமிழர் பேரவை துணைப் பொதுச் செயலாளர் செல்வ வில்லாளன் ஆகியோர் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

Tamil Weekly
Posted at : Pathrika Channel, Egmore RMS under WPP Posted: 07th October 2022

OWNER AND PUBLISHER BY : K. RAJENDRAN, FROM 29, JOURNALISTS COLONY, THIRUVALLUVAR NAGAR, THIRUVANMIYUR, CHENNAI - 600 041.
AND PRINTED BY : S. THEESMAS, AT LILLY SOOSAI OFFSET, NEW NO.8, OLD NO.12/1, MOHAMMED USAIN LANE, ROYAPETTAH, CHENNAI - 600 014.
EDITOR ; K. RAJENDRAN